# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 16.10.2025

SC. 202/2022

அ.சா 15 – R.யுவராஜ்

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ம் நாள் யுவராஜ் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | யுவராஜ் | தந்தை பெயர் | ராதாகிருஷ்ணன் |
| வயது | 43 | கிராமம் | சேலம் |
| வட்டம் | சேலம் | மாவட்டம் | சேலம் |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

1. நான் தற்போது சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி காவல் நிலைய குற்ற பிரிவின் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்து 13.02.2020 ம் தேதி நான் சூளகிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சூளகிரி காவல் நிலைய குற்ற எண் 59/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 341, 307 இதச வின் கீழான முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பால்ராஜ் என்பவர் குறித்து விசாரணை செய்ய காவல் ஆய்வாளர் சூளகிரி அவர்களால் தனி அலுவல் நியமிக்கப்பட்டு போலிஸ் பார்ட்டியுடன் ஆருப்பள்ளி கிராமம் சென்று விசாரணை செய்த போது சம்பவ நாளான 11.02.2020 ம் தேதி பால்ராஜ் அவருடைய ஓனர் சகாதேவன் மற்றும் உடன் பணிபுரியும் சக்திவேல் ஆகியோருடன் கிருஷ்ணகிரி சென்றதாக கிடைத்த தகவலின் பேரில் ஆருப்பள்ளி ஊரைச்சார்ந்த கிருஷ்ணன் என்பவருடன் கிருஷ்ணகிரியில் உள்ள ஸ்ரீமுருகன் ஜீவல்லர்ஸ் கடையில்

CCTV பதிவை பார்த்த போது பால்ராஜ் மற்றும் சகாதேவன் ஆகியோர்கள் கடையின் CCTV பதிவில் உள்ளது தெரிய வந்தது. கிருஷ்ணகிரி சுங்க சாவடியில் உள்ள CCTV பதிவுகளை நான் பார்வையிட்ட போது 11.0.2.2020 ம் தேதி மாலை 8.30 மணியை போல் பால்ராஜின் பல்சர் வாகனம் TN 70 AB 0015 என்ற வாகனத்தில் பால்ராஜ் மற்றும் சகாதேவன் இருவரும் கடந்து சென்றது தெரியவந்தது. சம்பவ நேரத்தில் பால்ராஜ் கிருஷ்ணகிரியில் இருந்தது தெரிய வந்தது. இது சம்மமந்தமாக சூளகிரி காவல் ஆய்வாளர் கடந்த 27.05.2020 ம் தேதி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 13.02.2020 ம் தேதி அன்று நான் சூளகிரி காவல் நிலையத்தில் எந்தவொரு பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு எழுத்து மூலமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. நான் சாட்சிகளை யாரும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் புலன் விசாரணையில் CCTV பதிவுகளை பார்வையிட்டு அதன் பதிவுகளை காவல் ஆய்வாளரின் ஒப்படைத்தேன். அதேபோல் சோதனை சாவடியிலும் CCTV பதிவுகளை பார்வையிட்டு அதன் பதிவுகளை பெற்று காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். எனது மேல் அதிகாரியின் உத்தரவு படி நான் நடந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur